
பாலகுமாரன்
மேகலா
சகலை

# சகலை

## பாலகுமாரன்



''உன்னை யாரு அந்த பொம்பளைய இட்டாறச் சொன்னது. இப்ப தேவையில்லாம பிரச்சனை ஆயிடிச்சில்லை.'' சண்முக சுந்தரம் கத்தினான். அவன் அம்மா தரையை பார்த்து உட்கார்ந்திருந்தாள்.

''பொண்ணு பார்க்கறதுக்கு பதினாறு பேரு தேவையா, நான் அப்பவே நெனைச்சேன், தேவையில்லாம ஆளைக் கூட்றேன்னு. அதுக்க ஏத்தா மாதிரி ஆய் போச்சு. பொண்ணுபார்க்க வந்தவ சில்மிஷம் பண்ணிட்டா,'' அப்பா குத்தலும் ஏளனமாகவும் சொன்னார்.

''எங்க ஒண்ணுவிட்ட சித்திப் பொண்ணுதான், ரொம்ப நாள் கழிச்சி என்னை பார்க்க வந்தது. எங்க மூத்த புள்ளைக்கு பொண்ணு பார்க்க போறோம்னு பேச்சு வாக்குல நான் சொன்னேன். எங்கத்திப் பொண்ணு, ஏது பொண்ணுனு விசாரிச்சுட்டு, நானும் வரட்டுமா அப்படின்னு கேட்டுது. அது இப்படி செய்யும்னு நான் எதிர்பார்க்கல. பொண்ணு பார்க்க போறம்னா கூட நாலு பேரு இட்டுக்கினு போறது வழக்கம்தான்.''

''பதினாறு பேரு தேவையில்லேன்றேன்''

''பதினாறு பேரு கூட்டினு போன தாலதான் நம்ம ஆளுங்க எங்க இருக்காங்க ஏது பண்றாங்கன்னு தெரியாம போச்சு. அவன் பேச்சை அப்பா விடாது தொடர்ந்தார்.

''வந்து உட்கார மாதிரி உக்காந்தா, காப்பி சாப்பிடறா மாதிரி சாப்பிட்டா. தான் சாப்பிட்ட தம்பளரை தானே கழுவிக் கொடுக்கற மாதிரி கொல்லை பக்கமா போனா, அந்த கொல்லை பக்கத்திலே காரியத்த முடிச்சிட்டா. நாம பேச்சு விவகாரத்துல நின்னுட்டமே தவிர இவ எங்க இருக்கான்னு பார்க்கவே இல்லை.''

அப்பா அலுப்பாய் முகம் துடைத்துக் கொண்டார்.

''இப்போ என்ன பெரிய தப்பாயிடிச்சு. ஊர் நாட்டுலே வழக்கம்தான். ஒரு பந்தல்லே ரெண்டு கல்யாணம் பண்றதுதான்.''

''செய்யக் கூடாதுன்னு சொல்றாங்களே'' சண்முகசுந்தரம் கத்தினார்.

''ரெண்டு பந்தலா போட்டுடலான்டா, ரெண்டு மணமேடையா செய்ய சொல்லிடுவோம். அப்போ தப்பு வராது.''

''வரும்'' சண்முக சுந்தரம் இந்த கல்யாணமே வேண்டாமென்று கத்தினான்.

''ஆத்திரப்படாதடா'' அம்மா அறிவுரைச் சொன்னாள்.

''அது எப்படி ஆத்திரப்படாம இருக்கறது. ரெண்டு மணமேடையா பண்ணைக் கூட ஒரு நால்ல, ஒரே இடத்துல ரெண்டு கல்யாணத்த நாம இதுவரைல செய்தது இல்லை. நம்ம ஊட்ல நடந்தது இல்லை. நம்ம சொந்தக் காரங்களே ஏன் இப்படிச் செய்தீங்கன்னு கேக்கறாங்க,'' அப்பா முகவாயை கையில் தாங்கிக் கொண்டு பேசினார்.

''நானும் அதைத்தான் சொன்னேன். இப்படி ரெண்டு செய்தோம்னா ஒரே மேடையில ரெண்டு பேரு தாலி கட்டினா, ஒரே முகூர்த்தத்திலே ரெண்டு கல்யாணம் நடந்தா ரெண்டுல ஒண்ணு நல்லா இருக்காதாம். ரெண்டுல எது நல்லா இருக்காதுன்னு இப்போதைக்கு அது தெரியவும் தெரியாது.

''நீ கொஞ்சம் வாய பொத்திக்னு இருக்கியா,'' விளக்கம் சொன்ன சண்முகசுந்தரத்தின் அத்தையை அவன் அம்மா கடுகடுத்துக் கொண்டிருந்தாள்.

''எங்க எழுதி வச்சிருக்கு ரெண்டுல ஒண்ணு நல்லா இருக்காதுன்னு. உங்க சொந்தக்காரு வீட்டுல கூட ஒரு மேடையில ரெண்டு கல்யாணம் பண்ணாங்க. உங்க தாய் மாமா பொண்ணுக்கு அப்படி கல்யாணம் நடக்கல. இன்னொரு மாமா பொண்ணுக்கும் சேத்து கல்யாணம் நடக்கல.''

''அதை வச்சுத்தான் சொல்றேன். அதுல ஒருத்தி அறுத்தவளா போயிட்டாளேன்னு தான் சொல்றேன்.''

''இருபது வருஷம் கழிச்சுத் தாண்டி அறுத்தா'' அம்மா சீற, அத்தை பதிலுக்கு சீறினாள்.

''அப்போ உன் புள்ள இருபது வருஷம் இருந்தா போதும்மா, நாற்பத்தாறு நாற்பத்தேழுல பரலோகம் போயிடலாமா.''

சண்முக சுந்தரத்திற்கு வயிறு கலங்கியது. திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்பதை அவன் வேறு விதமாய் உணர்ந்திருந்தான். ஒருவனுக்கு மனைவி ராசியானவளாக அமைந்தால் அவள் ராசியின் படி அவள் கணவனும் அவள் குடும்பமும் நன்றாக இருக்கும். கணவன் நீண்ட ஆயுளும் ஆரோக்கியமுடன் வாழ மனைவியே காரணம். மனைவிக்கு மாங்கல்ய பலன் சரியில்லையெனில் கணவன் எப்பேற்பட்ட வஸ்தாதாக இருந்தாலும் உயிர் வாழ்வது கஷ்டம் தான். இந்த மாங்கல்ய பலம் பற்றி சிறு வயதிலிருந்தே அவனுக்கு பெண்களின் பேச்சு மூலமாகவும், கதைகள் மூலமாகவும், தமிழ் சினிமாக்கள் மூலமாகவும், பல்வேறு விதமாய் சொல்லப்பட்டிருந்தது. இது மூட நம்பிக்கையோ என்கிற கேள்வி சிறியதாய் எழுந்தாலும் இதை நம்புவது அவனுக்கு பிடித்திருந்தது.

இதுவரைக்கும் தனக்கு வராத அதிஷ்டமெல்லாம் தன் மனைவி மூல

மாக வரவேண்டும் என்று அவன் விரும்பினான். பெரிய தங்க மோதிரம் போட்டுக் கொள்ள வேண்டும். தங்க கலர் செயின் வைத்த வாட்ச் கட்ட வேண்டும். சபாரியும் சூட்டும் அணிய வேண்டும். அழகான பெண்ணை மனைவி என்று பலருக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்கிற ஆசையெல்லாம் இருந்தது. இவையெல்லாம் கல்யாணத்தால்தான் நிறைவேறும் என்பதும் அவனுக்கு தெரியும். மீனம்பாக்கம் விமான நிலையத்தில் செக்யூரிட்டியாக இருக்கும் வேலை, அவனுக்கு. பெண்ணை பெற்றவர்களிடையே இது நல்ல மரியாதையை கொடுத்தது. சென்ட்ரல் கவர்மெண்ட் உத்தியோகம். பெரிய மனிதர்கள் வந்து போகுமிடம். பணம், காசு கொண்டவர்கள் சர்வ சாதாரணமாக நடமாடுவதைக் காணும் சந்தர்ப்பம். அவனுக்குத் தன்னைப் பற்றிய அதீத மதிப்பீட்டை கொடுத்தன. சூட்டு ரொம்ப முக்கியம் என்பது அவன் எண்ணமாக இருந்தது. நல்லபடியாக நகை போட்டு நல்லபடியா உடுத்தினாத்தான் சமூகத்தில் மதிப்பு என்று எண்ணமாக இருந்தது.

பெரிய மனிதர்கள் பலபேர் நடமாடும் இடத்தில் கிழிசல் சட்டையாய் நிற்க முடியாது. அவன் உயரத்திற்கும் அகலத்திற்கும் ஸபாரி சூட் போட்டு கழுத்தில் தங்கச் சங்கிலியும் விரலில் மோதிரமுமாய் நின்றால் எவரும் செக்யூரிட்டி என்று யாரும் நினைக்க மாட்டார்கள். சி.ஐ.டி. அதிகாரி என்று நினைப்பார்கள். அவன் நடந்து வருவதை பார்த்தே பணக்கார பையன்கள் சற்று கலவரமாய் பார்ப்பார்கள்.

''ஆபீசர் எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா'' என்று மரியாதையாக கேட்பார்கள்.

ஆள் பாதி, ஆடை பாதி என்பது உண்மை. ஒருவனுக்கு ஆடை மட்டும் முழுமையாய் கச்சிதமாய் அமைந்து விட்டால் பல இடங்களில் மதிப்பு வரும். உடம்பு வளம் இருக்கின்றது, உடை வளம் வேண்டும். ஒரு பாதி இருக்கின்றது, மறுபாதி சம்பாதிக்க வேண்டும்.

ஆனால், இரண்டாயிரத்து முன்னூற்றி நாற்பது ரூபாய் சம்பளத்தில் மூவாயிரம் ரூபாய் ஸபாரி தைத்துக் கொள்வது கடினம். ஆயிரத்து ஐநூறு ரூபாய் ஷு வாங்குவது கடினம். இவை எல்லாம் கல்யாணத்தின் போது கிடைக்கும். ஆனால் அதற்கும் போட்டி வந்து விட்டது. ஒரே மேடையில் இரண்டு கல்யாணம் என்று தீர்மானம் ஆகி விட்டது. இதற்கு பெண் வீட்டாரை பெரியதாய் குறைச் சொல்ல முடியாது. அவன் வீட்டிலேயே ஒரு அரைக்கிழவி குழி பறித்து விட்டது. சண்முகசுந்தரத்துக்கு பெண் பார்க்க வந்த கும்பலோடு சேர்ந்து கொண்டு என் ரெண்டாவது பெண்ணை என் மகனுக்கு கொடேன் என்று அங்கேயே பேசி முடித்து விட்டது.

என்ன பேச்சு நடந்தது என்று தெரியவில்லை. தாராளமாக தருகிறேன். ஒரு நிபந்தனை இரண்டு பெண்களுடைய கல்யாணத்தையும் ஒரே மேடையில பண்ணிடனும். உடனே இன்னொரு கல்யாணம் எனக்கு தாங்காது என்று சொன்னார்களாம். அந்த அம்மாள் சரியென்று உடனே ஒத்துக் கொண்டாளாம்,

''அவன் யாரு இதை ஒத்துக்கறதுக்குன்னு கேக்கறேன்'' அத்தைதான் முதலில் கீறிச்சிட்டாள்.

ஒரு மேடையில் ரெண்டு கல்யாணம் நடந்தால் ஒன்று பாழாய் போயிடும்னு அவள்தான் சொன்னாள்.

நாற்பது சவரன் நகை, ரெண்டு ஸபாரி சூட், ஒரு ஜதை அம்பாசிடர் ஷு, ஒரு ஜதை செருப்பு, அகலமான தங்க மோதிரம், ஐந்து பிடி தங்க சங்கிலி என்று ஏற்றுக் கொண்ட பெண் வீட்டாரை சட்டென்று தள்ளவும் முடியவில்லை. அதையும் தவிர அந்த பெண் மிகவும் லட்சணமாய் இருந்தது. சற்றுக் குள்ளமானாலும் முகம் வசீகரமாக இருந்தது. அந்த பெண்ணின் கன்னத்து மச்சம் ஒன்று, கனவில் கூட துரத்தி வந்தது

எல்லாம் பேசி எழுதிக் கொடுத்த பின்னர் அதே மேடையில் இன்னொரு கல்யாணம் என்பதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை

ஆனால் இப்படி நடப்பது தவறென்று சொல்ல வெளியாட்கள் கூட வேறு வகையில் சமாதானம் பேசினார்கள்.

ரெண்டு பொண்ணு பெத்தவன் அப்படிதான் ஐடியா பண்ணுவான், இன்னைக்கு கல்யாணம்கிறது சாதாரண விஷயம்மா, அறுபதாயிரம் எழுபதாயிரம் என்ன சும்மா காசா, சம்பாதிக்க வேண்டாம்மா, சமாதானம் சொன்னார்கள்.

''எங்களுக்கு ரெண்டு கல்யாணம் பண்ணனும்னு எண்ணமே இல்லை. அவுங்க ஊட்டுல இருந்து நடக்குனு ஆள் வந்து இன்னொரு பொண்ணை கேட்டதாலே நல்ல இடம் தாரேன்னு சரின்னு சொல்லிட்டோம். ரெண்டு பொண்ணையும் ஒரே குடும்பத்துல கொடுக்கறதுல பல வசதிங்க இருக்குங்க. அக்காளும் தங்கச்சியும் அனுசரிச்சு போறதுக்கு வாட்டமாயிடும். ஒரு கஷ்டம்னா அஞ்சு ரூபா அவள் கேட்கலாம், இவள் கொடுக்கலாம். உதவி செய்றதுக்கு ஆள் இருக்குன்னு ஒரு தெம்பு வரும். நாங்களா ஆசைபடலே வந்துது செய்யறோம்.

''அவங்களுக்கு தெரியாதா ஒரே மேடையில ரெண்டு கல்யாணம் பண்ணா ஒன்னு சரியா வராதுன்னு தெரியாதா, அது எப்படின்னு போவட்டும்னு பொண்ணு பெத்தவன் சும்மா இருக்கலாம்மா...''

கேட்டு அனுப்பியதற்கு பதில் வேறு விதமாக வந்தது.

இது பழங்காலத்து பேச்சுங்க. சாப்பிட இடத்தை சாணி போட்டு மொழுகணும்னு வழக்கம் உண்டு. மொசைக் தரையில சாணி போட்டு மொழுக மனசு வரும்மா. போட்டாதான் நல்லா இருக்குமா. அன்னிக்கு நெலவரத்துல அப்படி வழக்கு இருந்தது. இப்ப பார்த்தா அப்படி முடியுமா. நம்ம கல்யாணத்துல மாப்பிள்ளை தலைப்பா கட்டி, உருவின பட்டா கத்தியோட வரணும். இன்னைக்கு அப்படி வர முடியுமா. தலைப்பாயே கட்றதில்லே. கத்திக்கு எங்க போறது.

''ஒரு கல்யாணம்தான் நடக்கணும்னு நீங்க பிடிவாதம் பிடிக்கலாம். இப்போ கோவப்படலாம். நாம ஒண்ணுக்குள்ள ஒண்ணாயிட்ட பிறகு நான் படற கஷ்டம் உங்களுக்கும் நேரும். அடடே மச்சினி கல்யாணத்துக்கு மாமனார் அலையறாரென்று வருத்தம் வரும். அப்போ வருத்தப்படறதுக்கு இப்பவே பெருந்தன்மையா ஒத்துக்கலாம்'' மனோதத்துவ ரீதியாய் வலை போட்டு சண்முகசுந்தரத்தை பெண் கொடுக்கும் வீட்டில் நெருக்கினர்.

''ஏக கூட்டமாயிருக்க, அவங்க பக்கத்து ஆள், எங்க பக்கத்து ஆள்னு பெரும் கும்பல் சேர்ந்திருக்கும். கடைசியா நம்ம பக்கத்து ஆள் சாப்பிட முடியாம போகும். அது நமக்கு அவமானம்'' சண்முகசுந்தரம் வேறுவிதமாய் மிரட்டினான்.

''அப்படி ஆவாதுங்க'' எதிர் அம்பு போட்டார்கள்.-

அவங்க பக்கம் எண்ணி பத்து பேருதான் கல்யாணத்துக்கு வருவாங்களாம். இங்கே கல்யாணம் முடிச்சிட்டு மறுநாள் சாயந்திரம் செங்கல்பட்டுல ரிசப்ஷனாம்.

''அதென்னா செங்கல்பட்டு?''

''அந்த மாப்பிள்ளைக்கு அங்கத்தானே பிரஸ் இருக்கு.''

''சொந்த பிரஸா''

''பிரஸ் தம்பி பேருல இருக்கு. அண்ணன்தான் வரப்போக பார்த்துக்கறாராம். இன்னொரு தம்பி அதுலே வேலை செய்யறானாம்.''

''என்ன வருமானம் வரும் மூணு

பேருக்கும்?''

''நாங்க வருமானம் பார்த்து பொண்ணு கொடுக்கலீங்க. புள்ளை ரொம்ப நல்ல புள்ளைன்னு சொன்னாங்க. அதை வச்சுத்தான் தரோம். அப்படி பார்த்தா உங்க வருமானத்தை விட அதிக வருமானமா நிறைய வரன் வந்தது. நாங்க மனுஷான் பக்குவமா இல்லேனு திருப்பிட்டோம். இது உங்க கல்யாணம். நீங்கதான் முதல்ல தாலி கட்டீங்க. அடுத்துதான் அங்க போய் நின்னு அவனை தாலிகட்ட சொல்றோம்.''

சண்முகசுந்தரம் வேறு வழியில்லாது ஒத்துக் கொண்டான். தன்னை விட வருமானத்திலோ பதவிலோ அந்த ஆள் பெரியவராய் இல்லை என்பதை மற்றவர் சொல்ல சமாதானமானான்.

''உன் நட்சத்திரத்துக்குதான் நாள் பார்த்து இருக்கு. உனக்கு ஒண்ணும் ஆகாது,'' என்று சொல்ல அமைதியானான். ஒரே பந்தலில் இரண்டு திருமணத்திற்கு ஒத்துக் கொண்டான். மாமனார் வீட்டு கல்யாண பத்திரிகை இரண்டு திருமணம் என்று சொன்னாலும், அவனுடைய கல்யாண பத்திரிகை தனிப்பட்டதாய் அமைந்து இருந்தது. அந்த மாப்பிள்ளை மாமனாரிடமே நூறு பத்திரிகை வாங்கி தன் உறவுகளுக்கு விநியோகித்ததாய் தெரிய வர சிரிப்பு வந்தது.

'பிரஸ்' வச்சிருக்கேன்னு சொல்றான், ஒரு கல்யாண பத்திரிகைக் கூட அடிக்க முடியவில்லையா?' எக்காளமாய் கேள்வி கேட்டான்.

அது லித்தோ பிரஸ்சாம். போஸ்டர்தான் அடிக்க முடியுமாம். கல்யாண பத்திரிகை மாதிரி சின்ன வேலை செய்ய முடியாதாம்.''

'அது கடக்கட்டும். அவனுக்கு சூட்டு வாங்கலே.''

''வாணாம்டாங்க... அவரு பேண்ட் போடற வழக்கம் இல்லையாம்.''

''ஏன், அரை டிராயர்தான் போடுவாராம்ம...''

''இல்லை பள்ளிக்கூடத்துல படிக்கிறப்போ வேட்டி சட்டைதானாம்...''

''சரியான மாடு மேயிக்கிற ஆளா பார்த்து புடிச்சிட்டாங்க போல. விசாரிக்க செஞ்சிருக்க கூடாது. நகை மோதிரம் கூட போடலையா..''

''கேட்டோம். நகை மோதிரத்தை எங்க பொண்ணுக்கே போடச் சொல்லிட்டாரு.''

''ஏன் அதுவும் போட்டுக்கறதில்லையாமா.''

''ஒரு தடவை காஞ்சிபுரம் பெரியவர்ட போயிருந்தபோது இன்னா மூணு மோதிரம் போட்டுனு இருக்கியே போதுமானு கேட்டாராம் பெரியவரு. வெட்கமாயிடிச்சாம். எல்லாத்தையும் கழட்டி வச்சிட்டாராம்.''

''என்னாங்க அது, இப்ப மோதிரம் போடாம எப்ப போடறது. சாமியார் வாணம்னு சொல்லுவாரு. நமக்கு ஒரு மதிப்பு வாணாமா. அவனுக்கு மைத்துனியின் கணவனை பற்றி ஒன்றும் புரியவில்லை. அந்த ஆளை திருமணத்திற்கு முன்வரை பார்க்க முடியவில்லை.

தன்னை விசாரிக்க வரும் ஆட்களை பார்த்து பந்தியில் உட்கார வைக்க, உபசரித்து தாம்பூலம் கொடுக்க ஏழெட்டு ஆட்களை நியமித்திருந்தான். ஒன்பது பத்துக்கு அவன்தான் முதலில் தாலி கட்டினான். ஒன்பது பதினைந்துக்கு மைத்துனிக்கு அந்த ஆள் தாலி கட்ட அவனும் கை நிறைய அட்சதை எடுத்து அந்த பக்கம் போட்டான்.

''இவர்தான் உங்க சகலை'' அடுத்த அரை மணியில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

ஒல்லிய உடம்பாய் சண்முகசுந்தரத்தை விட ஒருபிடி உயரம் கம்மியாய் ரொம்ப மிருந்த பணிவான ஆளாய் சட்டென்று தானே வந்து கைகுலுக்குகின்ற குழைவில் அந்த ஆள் இருந்தான். அவன் பக்க ஆட்கள் பனிரெண்டு பேர்தான் வந்தார்களாம். அதில் நாலு பேரு சாப்பிடவில்லையாம். மொய் எழுதுகிறபோது நாலைந்து முறையே அவன் பெயர் சொல்லப்பட்டது. மீதியெல்லாம் சண்முகசுந்தரத்திற்கே தரப்பட்டது.

''ஏன் உங்க அப்பா இப்படி ஒரு ஆளுக்கு உன் தங்கச்சியை கொடுத்தாரு. கொஞ்சம் பொறுமையா இருந்திருந்தா நான் வேற இடத்துல மாப்பிள்ளைய பார்த்திருப்பேன்ல'' மனைவியிடம் மெல்ல பேசினான். மனைவி ஒரு முறை அவனை நிமிர்ந்து பார்த்து விட்டு தலைகுனிந்து கொண்டாள்.

''அவங்க ஆளுங்கக் கூட அதிகமா வரலே. என்னா காரணம்'' மறுபடியும் மனைவியை கேட்டான்.

மனைவி அந்த கேள்வியை தன் தம்பியிடம் சொல்ல, அவன் தம்பி தன் அப்பாவிடம் சொல்ல, சண்முகசுந்தரத்தின் மாமனார் மூலமாக பதில் வந்தது.

உங்களுக்கு கஷ்டமாயிடும்தான் அவர் நிறைய பேரை கூப்பிடலே. ஆனா, செங்கல்பட்டுல அவரு ரிசப்ஷன் வச்சிருக்கிறாரு, உங்கள முறையா கூப்பிடுவாரு.''

''செங்கல்பட்டா, எப்படி போறது. பஸ்லியா இருந்தா நான் வர மாட்டேன்'' சண்முகசுந்தரம் அவசரமாய் மறுக்க இரண்டு கார் ஏற்பாடு செய்திருப்பதாய் தகவல் வந்தது.

அன்று மா[illegible] மைத்துனியும் சகலையும் காரி[illegible]ங்கல்பட்டு போனார்கள்.

முதல் இரவு அவர்களுக்கு நான்கு நாட்கள் கழித்து தானாம். அவசரமாக செங்கல்பட்டு போக வேண்டி இருப்பதால் இந்த ஏற்பாடாம். சண்முகசுந்தரத்துக்கு முதல் இரவு கல்யாண மண்டபத்துலே நடந்தது. முதல் இரவு அழைப்பின் போதும் இங்கே முதல்லேயும் நான்தான் என்கிற கர்வம் வந்தது. மனைவியிடம் அன்று இரவு தன் வேலை பத்தியெல்லாம் விபரமாக சொன்னான்.

''என்னை பார்த்தா சி.ஐ.டி. போலீஸ் மாதிரி இல்லே?''

உன்னை கைபிடிச்ச நேரம் எனக்கு ப்ரமோஷன் வந்தாலும் வந்துடும்'' என்று பேசினான். மறுநாள் அயர்ந்து பகலில் தூங்கும்போது எழுப்பி செங்கல்பட்டுக்கு கூட்டிக் கொண்டு போனார்கள். காரிலும் வசதியாக சண்முகசுந்தரம் தூங்கிக் கொண்டு போனான்.

சட்டென்று விழித்தபோது செங்கல்பட்டு ரயில்வே லைன் தாண்டி இருப்பது தெரிந்தது. தெருவெங்கு மூவர்ணக் கொடிகள் பறந்துக் கொண்டிருந்தன. பெருந்தலைவர் காமராஜர் கட்-அவுட் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. வழி முழுவதிலும் குழல் விளக்குகள் போடப்பட்டிருந்தன.

''என்ன இது கட்சிக் கூட்டமா?'' சண்முகசுந்தரம் கேட்டான்.

''இல்லிங்க, ரிசப்ஷனுக்குதான் இதலாம் போட்டு இருக்கு.''

''ஏன் ரிசப்ஷனுக்கு கட்சிக்கொடி.''

''உங்க சகலை அந்த கட்சியில பெரிய ஆளாச்சே. அவனவன் வருஷத்துக்கு ஒன்னுனு கட்சிய மாத்தும் போது, இவரு படிக்கிற நாள்லே இருந்து ஒரே கட்சியிலதான் இருக்காரு. பதினைந்து வருஷமா மெம்பரு. ஆறு வருஷமா இந்தப் பகுதி செயலாளரா இருக்காரு.''

பள்ளிக்கூட மைதானத்தில ரிசப்ஷன் வைக்கப்பட்டிருந்தது. இருள் கவிழும் நேரத்தில், தலைவர்கள் பல பேர் வந்தார்கள். வெள்ளை சட்டையும், வெள்ளை வேட்டியுமாய் பல தொண்

டர்கள் வந்து கைக்குலுக்கினார்கள்.

மேடையில் இரண்டு பக்கமும் இரண்டு சோபாக்கள் போட்டு ஒன்று சண்முகசுந்தரமும், மற்றொன்றில் அவன் சகலையும் அமர்ந்து கொண்டார்கள். சண்முகசுந்தரம் முழு ஸபாரியில் இருந்தான். கனத்த ஷூ காலில் அணிந்திருந்தான். மைதானத்தில் உள்ள காற்று வசதி மேடையில் இல்லை. புழுங்கியது. அவன் பக்கம் இருந்த ஃபேனை சுசுத்தமாய் திருப்பி தலைவர் பக்கம் யாரோ திருப்ப முயலும் போது தலைவரே கைநீட்டி தடுத்து விட்டார்.

''செயலாளருக்கு ஃபேன் இருக்கட்டுமய்யா, இல்லேன்னா இந்த செங்கல்பட்லே ஒரு செயலும் நடக்காது'' என்று ஜோக் அடித்தார்.

இடைவிடாது கேமராக்கள் மின்னின. வீடியோ குறுக்கும் நெடுக்கும் அலைந்தது. தலைவர் பேசுவதற்கு முன்பு மலர் மாலைகள் தவிர வேறு எந்த அன்பளிப்பும் ஏற்றுக் கொள்ளப் பட மாட்டாது என்று அறிவிப்பு செய்யப்பட்டது. நேற்று திருமணத்தின் போது காசாக வந்த மொய் பணம் ரூபாய் நாலாயிரத்தை கட்சிக்கு கொடுப்பதாக சகலை அறிவித்தான். அதையும் மீறி யாரோ சகலைக்கு வெள்ளிக்குடம் கொடுத்த போது அதை அங்கேயே தலைவர் முன்னிலையில் ஏலமிட்டு அந்த காசையும் கட்சிக் கொடிக்கு கொடுக்கப்பட்டது. யாரோ கதர் துணி இருபது மீட்டர் எடுத்துவர அதையும் ஏலம் விடலாம் என்று யாரோ கைப்பற்ற சகலை தலைவர் காதில் ஏதோ சொல்ல அந்த இருபது மீட்டர் வெள்ளைக் கதரும் சகலை பரிசாய் சண்முகசுந்தரத்துக்கு கொடுக்கப் பட்டது.

இரண்டு இனிப்பு மூன்று வெஞ்சனம் போட்டு பெரிய விருந்து நடந்தது. தலைவருக்கு இடதுபக்கம் சண்முகசுந்தரமும், வலது பக்கம் சகலையும் தந்தம் மனைவிகளோடு அமர்ந்திருக்க பத்துப் பதினைந்து போட்டோக்கள் மின்னின.

தலைவரோடு போட்டோ எடுத்துக் கொள்ள உட்கார்ந்திருந்த அவர்களுக்கு பின்னால் பல பெரிய மனிதர்கள் போட்டியிட்டுக் கொண்டிருந்தார்கள். எல்லா கோலாகலமும் முடிந்து மாமனாரிடம், ''இவ்வளவு செலவு பண்றாங்களே சகலைக்கு வசதிகள் உண்டா,'' சண்முகசுந்தரம் கேட்டான்.

''அவரு அரசியல்வாதிங்க'' செலவு அவரா பண்றாரு. அவருக்கு வேண்டப்பட்ட எம்.எல்.ஏ.வும், எம்.பி.யும் பண்றாங்க. நீங்க வந்தீங்களே காரு அதை யாருக்கும் தெரியாம அவருக்கு ரகசியமா பரிசு கொடுத்தாங்க. கல்யாணத்த எளிமையா நடத்தணும்னு தலைவர் கட்டளையாம். கல்யாணத்தை எளிமையா பண்ணிட்டு ரிசப்ஷனை தடபுடலா பண்ணிட்டாங்க. விஜிடபிள் பிரியாணி மொத்தமும் நெய்யிலேயே பண்ணியிருக்காங்க. வாசனைய பார்த்தீங்களா'' சண்முகசுந்தரத்தின் மாமனார் தன் உள்ளங்கையை முகர்ந்து கொண்டார்.

மறுநாள் பல பத்திரிகையில் ரிசப்ஷன் போட்டோக்கள் வந்திருந்தன. அதில் சகலை கைகூப்பி மாப்பிள்ளை போல் இருக்க, சண்முகசுந்தரம் ஸபாரி சூட்டில் செக்யூரிட்டி போலவே இருந்தான்.

ஒரே மேடையில் இரண்டு கல்யாணம் செய்தால் இரண்டில் ஒன்று மட்டமாகும் என்பது உண்மைதான். ஆனால், எந்த காரணத்தால் மட்டமாகும் என்பதுதான் இப்போ புரிந்தது.

நான்கு நாட்கள் கழித்து சண்முகசுந்தரம் வாழ்க்கையில் முதன் முதலாய் கதர் சட்டை தைத்துக் கொண்டான். அது ஸபாரி சூட்டை விட அழகாக இருப்பதை போல் அவனுக்குப் பட்டது.

●

1

புகைப் படத்திலிருந்த அவனின் முகத்தைப் பார்த்த துமே சங்கீதாவுக்குள் இனம் புரியாத சிலிர்ப்பு ஏற்பட்டது. கூர்ந்து, கூர்ந்து பார்த்தாள். அவள் கண்களில் ஒளி வீசியது.

ஒருவனைப் போல முக ஜாடையில் ஏழு பேர் இருப் பார்கள் என்று அவள் பெரியவர்கள் மூலம் கேள்விப்பட் டிருக்கிறாள். ஆனால் இப்படி, அச்சு, அசலாய் தமது ஷ்யாம் போலவே இருப்பானென்று நினைத்துப் பார்க்கவில்லை.

அந்த கூர்மையான மூக்கு, நெற்றி, கண்கள், சிரிக்கும்போது பல் வரிசை யில் முன்பல் ஒன்று தெற்றுப்பல். இப்படி அத்தனை அம்சமும் ஷ்யாமின் ஜெராக்ஸ்.

வைத்தக் கண் வாங்காமல் அவன் புகைப்படத்தையே பார்த்துக் கொண் டிருந்தவளை அப்பா வைத்தியலிங்கத்தின் குரல் உசுப்பியது.

"என்னம்மா சங்கி. பையனோட போட்டோவை பார்த்து அப்படி பிரம் மிச்சு நின்னுட்டே? தரகர் நேத்து சாயங்காலம் கொண்டு வந்து கொடுத்தார். பையன் பேரு அரவிந்த். எம்.ஏ. படிச்சிருக்கான். ஒரு தனியார் நிறுவனத்துல அதிகாரி. இதுவரை பார்த்த ஒவ்வொரு வரனையும் தட்டிக் கழிச்சிட்டே. இதையும் அப்படி செய்துடாதேம்மா."

மகளை கெஞ்சுவது போல் கேட்டார் அப்பா.



# காதல் நிழல்

வத்சலா சிவசாமி

இன்னமும் அந்த ஆச்சரியத்திலிருந்து மீளாமலே சொன்னாள் சங்கீதா.

"அ.. அப்பா உங்க இஷ்டம்"

அவள் இப்படி கூறியதும் அவர் புல்லரித்துப் போனார். அம்மா பங்கஜத் தின் முகமும் பிரகாசமானது.

இதுவரை திருமண பேச்சை எடுத்தவுடனே அதைப்பற்றிய விருப்பமேயின்றி உடனடியாய் மறுத்துவிடும் மகள் இவன் போட் டோவை பார்த்ததுமே ஆமோதித்தது கண்டு சந்தோஷப்பட்டார்கள்.

"என்னங்க தரகர்கிட்ட பேசி சட்டு புட்டுன்னு மத்த வேலை களை கவனிங்க" கணவனைத் தூண்டினாள் பங்கஜம்.

"ஆவட்டும் பங்கஜம்."

கடவுளின் அனுகிரகத்தால் இந்த இடமாவது மகளுக்கு அமைய வேண் டும். நல்லபடியாய் திருமணம் நடக்க வேண்டும் என்று மனதில் பிரார்த்தித்துக் கொண்டார் வைத்தியலிங்கம்.

வரதட்சணை பிரச்னையால் எத்தனையோ பெண்களின் வாழ்க்கை கேள்விக் குறியாய் இன்று இருக்கும்போது சங்கீதா மட்டும் அதில் வேறுபட்டிருந்தாள்.

அழகு தேவதையான சங்கீதாவை பெண் பார்க்க வரும் அனைவரும் பார்த்த மாத்திரத்திலேயே பிடித்துவிட்டது என்பார்கள். உடனடியாய் திருமணம் செய்து கொள்ள சம்மதம் சொல்லிவிடுவார் கள். ஒரு பைசா வரதட்சணை வேண்டாம் சங்கீதாவை அடைந்தால் போதும் என எத்தனையோ பேர் ஒற்றைக் காலில் நின்றார்கள்.

ஆனால் அவள்? ஒரே வார்த்தையில் எனக்கு மாப்பிள்ளையை பிடிக்க வில்லை. இப்போது திருமணம் எனக்கு வேண்டாம் என பட்டென்று அப்பாவிடம் கூறி விடுவாள். காரணத்தை வெளிப்படை யாய் சொல்ல மாட்டாள். அது ஏன் என்பதும் அவருக்குப் புரிய வில்லை.

ஒருமுறை மிகவும் கண்டிப்புடன் "ஏம்மா உம் மனசுல என்ன தான் நெனைச்சிட்டிருக்கே? இல்ல வேற ஏதாவது யாரை யாவது மனசுல வெச்சிருக்கியா.. அதையாவது சொல்லும்மா" - அப்பாவின் ஆலோசனையின் பேரில் அம்மா பங்கஜம் கேட்டபோது சங்கீதா சீறினாள்.

"அம்மா.. உங்க மக உயிரோட இருக்கணும்னா இப்படியெல் லாம் பேசா தீங்க. எனக்கு பிடிக்கலன்னா பிடிக்கலதான். வீணா என்ன வற்புறுத்தாதீங்க."

அதைக் கேட்டு அம்மாவும் அப்பாவும் பயந்து விட்டார்கள்.

"உன் இஷ்டத்துக்கு விரோதமா எதையும் செய்ய மாட்டோம்மா, அதுக் காக பெரிய வார்த்தையெல்லாம் சொல்லக் கூடாதும்மா" - அம்மா பங்கஜம் சொன்னாள்.

சங்கீதாவை அவர்களால் புரிந்துக் கொள்ள முடியவில்லை.

தனியறையில் படுத்திருந்த சங்கீதாவின் மனதிலிருந்த அந்த உண்மைகள் இப்போது விழித்துக் கொண்டன.

2

அரவிந்தின் போட்டோவை கண்ட மாத்திரத் திலேயே அந்த நிகழ்வுகள். நடந்து முடிந்த சம்பவங்கள். ஒவ்வொன்றாய் அவளிடம் காட்சிகளாய் விரிந்தன.

சங்கீதாவின் இனிய கல்லூரி நாட்கள் அவை.

கல்லூரியில் அவள் ஒரு நட்சத்திரம். அபார அழகி. அவளின் அழகுக்கு மயங்காத ஆடவரே இல்லை. அங்குள்ள கல்லூரியில் அவளோடு படித்த அத்தனை மாணவர்களும் அவளை எப்படியாவது தன்னவளாக்கிக் கொள்ள வேண்டு மென்று துடித்தனர்.

சங்கீதா போகுமிடமெல்லாம் ஒரு ஆடவர் கூட்டமும் இருக்கும். ஏதாவது 'பாவ்லா' செய்து அவள் கவனத்தைக் கவர நினைப்பார்கள்.

அவள் எதையுமே லட்சியம் செய்ய மாட்டாள். மாறாக அவர்களை தமக்கு அடிமையாக கருதினாள்.

அவர்களில் ஒரு சீனியர் மாணவன்தான் ஷ்யாம். எம்.காம் இரண்டாம் வருடம் படித்துக் கொண்டிருந்தான்.

அவன் நிறைய கவிதைகள் எழுதுவான். ஆத்மார்த்தமான உணர்மைகள், நாட்டு நடப்புகள் அதில் பிரதிபலிக்கும். நல்ல உயரம், அதற்கேற்ற உடல்வாகு. களையான முகம், கனவு சுமந்த கண்கள். நிறைய, மாணவிகள் அவன் கவிதை யின் ரசிகைகள்.

"எப்படிதான்டி ஷ்யாம் இவ்வளவு அழகா வார்த்தைகளைப் பொறுக்கி கவிதை வடிக்கிறார்? ரியலி சூப்பர்டி. ஷ்யாமுக்கு வருங்காலத்துல நல்ல புகழ் காத்திருக்கு. பெரிய ஆளா வருவார்" - சக மாணவிகளின் இந்த புகழாரம் சங்கீதாவுக்குள் எரிச்சலை மூட்டும்.

"அவன் என்ன பெரிய கொம்பனா.. இவனாட்டம் யாருமே கவிதை எழுத முடியாதா?" - மனதில் ஆதங்கப்படுவாள் சங்கீதா.

ஒருமுறை ஓர் இதழின் கவிதைப் போட்டிக்கு அனுப்பிய ஷ்யாமின் கவிதை முதல் பரிசு பெற்றது.

அவன் புகைப்படத்தோடு அதை அட்டகாசமாய் வெளியிட்டிருந்தார்கள்.

மிகவும் சந்தோஷப்பட்டான் ஷ்யாம். சக மாணவர், மாணவி யெல்லாம் பெரிதும் அவனை பாராட்டினார்கள்.

அதே சந்தர்ப்பத்தில் சங்கீதாவிடமும் அவன் கவிதையைக் காண்பித்து படித்துப் பார்க்கச் சொன்னான்.

"இது மாதிரி எவ்வளவோ பேர் எழுதறாங்க. இதுல என்ன பெருமை இருக்கு" முகத்திலடித்த மாதிரி பட்டென்று சொன்னாள் சங்கீதா.

அவனோ புன்னகைத்தான்.

"யூ ஆர் கரெக்ட் சங்கீதா. இதுல ஒண்ணும் பெருமை இல்லதான். ஆனா பாருங்க எம் மனசுல இருக்கிறதை கொட்டி எழுதறப்ப எனக்குள்ள ஒரு திருப்தி ஏற்படுது. அதையே பத்திரிகை வாயிலா பலரும் படிக்கும்போது ஏற்படும் ஆலாதி ஆனந்தமே தனி."

- அவன் சொல்ல..

"தற்பெருமையே எனக்குப் பிடிக்காது. டோண்ட் வேஸ்ட் மை டைம்" விருட்டென்று விலகிப் போனாள் அவனிடமிருந்து.

தூரத்தில் போய், ஷ்யாமின் முகம் வாடிப் போனதைக் கண்டு மனதிலேயே சந்தோஷித்தாள்.

எல்லா மாணவர்களாலும் புகழப்படும் இவன் எனக்கு அடிமையாகிவிட வேண்டும் என்று உள்ளுக்குள்ளாகவே சொல்லிக் கொண்டாள்.

இவனை திறமைசாலி என்று புகழ்ந்துவிட்டால் அவனுக்கு கர்வம் ஏற் பட்டுவிடும். தன்னையும் மற்ற மாணவிகளைப் போலவே பாவித்து விடுவான்.

இந்த ஷ்யாம் எப்படியும் என் பின்னால சுற்ற வேண்டும், எல்லோரும் பார்த்து மூக்கில் விரல் வைக்க வேண்டும். அதன் முதல்படிதான் எனது இந்த உதாசீனப் பேச்சு.

சங்கீதாவின் இந்தப் பேச்சில் அவன் சளைத்து விடவில்லை. தொடர்ந்து நிறைய கவிதைகள் எழுதினான். ஆனால் இப்போது உள்ள ஒரு மாறுபாடு அவன் எழுதிய கவிதைகள் அத்தனையும் சங்கீதாவை வர்ணித்தே எழுதினான்.

அதில் அவள் தம்மை அலட்சியப்படுத்துவதை உணர்த்தி அவளது ஏக்கத் தையும் வெளிப்படுத்தினான்.

ஒவ்வொரு கவிதையும் எழுதி முடித்து விட்டு அவள் பார்வைக்கு கொண்டு வருவான்.

**எ**லுமிச்சை சாற்றையும், தேனையும் சம அளவு எடுத்து லேசாக சூடு செய்து அருந்தினால் இருமல் அகலும்.



"இதைப் படிச்சுப் பாருங்க சங்கீதா"

அதை வாங்கி மேலோட்டமாய் பார்த்துவிட்டு பதிலேதும் சொல்லாமல் ஒரு சிறு புன்னகையை மட்டும் உதிர்த்து விட்டு திருப்பிக் கொடுத்துவிடுவாள்.

"சங்கீதா எவ்வளவு கனவுகள்.. ஆசைகள் இருக்குத் தெரியுமா? இன்னிக்கு என்னைப்பத்தி காலேஜ்ல புகழ்ந்து பேசறாங்க. அதுல எல்லாம் எனக்கு மகிழ்ச்சி யில்ல. உங்க வாயால நீங்க ஒரு வார்த்தை என்னை பாராட்டணும்.. என் கவிதையைப் படிச்சட்டு.."

"ஊம் அப்புறம்?"

"அப்புறம் சினி ஃபீல்டுல ஒரு நல்ல கவிஞனா.. பாடலாசிரியரா வாழணும்.. நான் இறந்துட்டாலும் என் கவிதைப் படைப்புகள் மக்கள் மனசுல நிலைச்சு வாழணும்.. முக்கியமா உங்க மனசுல.." அவன், சொல்லிவிட்டு அவளை ஆவலாய் பார்க்க..

சங்கீதாவோ கேலியாய் தலையில் தட்டிக் கொண்டு குலுங்கி குலுங்கி சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறீங்க..?" பரிதாபமாய் கேட்டான்.

"உங்களை நெனைச்சா எனக்கு அழுறதா.. சிரிக்கிறதான்னே தெரியல.."

"ஏன்?"

"உங்களை மாதிரி இந்த அற்பக் கனவு காண்றவங்களெல்லாம் எத்தனை, எத்தனை பேர்? எல்லாருடைய கனவுகளுமே நிறைவேறுதா? தட் இஸ் இம்பாஸிபிள்.."

"சங்கீதா.. ஏ.. ஏன் அப்படி சொல்றீங்க?"

"உங்க ஆசை வீணானது. காலத்தையும், நேரத்தையும் வேஸ்ட் பண்றீங்க. உங்களால எல்லாம் ஒருக்காலும் பெரிய கவிஞராகவும், சினிமா பாடலாசிரியராகவும் வரவே முடியாது. இனியாவது உருப்படியான வேலை எதையாவது செய்யப் பாருங்க.."

சங்கீதா பேசி விட்டு அகன்றுவிட.. ஷ்யாம் அதிர்ந்துப் போய் நின்றான்.

## 3

**க**ல்லூரி மாணவன் ஷ்யாம் ஒரு ஏழ்மை குடும்பத்தை சேர்ந்தவன்.

அவன் உலகை அறிந்துக் கொள்ளும் முன்னதாகவே அவனது அப்பா முத்துசாமி கண்ணை மூடிவிட்டார்.

அதன் பிறகு ஷ்யாமின் தாய் மல்லிகா பல இன்னல் களுக்கு மத்தியில், கணவன் வைத்துவிட்டுப் போன வீட்டை யும் கொஞ்சம் பணத்தையும் வைத்து, வீட்டு வாடகையிலும், பணத்தை வட்டிக்கு விட்டும் மகனை ஆளாக்கினாள்.

படிப்பில்லாத அந்த தாய் இன்றைய விலைவாசி உயர்விலும் மகனின் படிப்பு செலவை முன்னிட்டும் கணவன் வைத்துவிட்டுப் போன ஒரு வீட்டை யும் விற்றுவிட்டாள்.

பணக்காரர்களின் இல்லத்து விசேஷ சமயங்களின்போது சமையல் வேலைக்கு சென்றாள்.

"அம்மா நீ ஏன் இப்படியெல்லாம் கஷ்டப்படறே.. நான் படிப் பை விட்டுட்டு பேசாம ஒரு வேலைக்கு அமர்ந்துடறேன்..



கிளிஸரினும், சர்க்கரையும் கலந்து உள்ளங்கையில் அடிக்கடி தடவி வந்தால் - உள்ளங்கை பட்டுப் போல் மிருதுவாக இருக்கும்.

உன்னை கஷ்டமில்லாம வெச்சு காப்பாத்தறேன்" - ஷ்யாம் சொல்லும் போது...

"நீ சும்மா இருப்பா. என் வாழ்க்கைதான் இப்படி ஆயிடுச்சு. நீயாவது என் பேரையும் அப்பா பேரையும் சொல்ற மாதிரி நிறைய படிச்சு பெரிய உத்தியோகத்துல அமர்ந்து புகழோட இருக்கணும். இப்ப உன் கவனமெல்லாம் எங்கேயும் போகக் கூடாது படிப்புலதான் இருக்கணும் ராசா."

அம்மா கூறுகையில் அவன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பும்.

"செய்றேம்மா... நிச்சயம் உன் ஆசையை நிறைவேத்தறேன். நல்லா படிச்சு பெரிய உத்தியோகத்துல சேர்றேன். உங்க பேரை எடுக்கறேம்மா."

- சொன்னது போலவே நன்கு படித்தான்.

பி.காம் படிப்பை முதல் வகுப்பில் தேறி, எம்.காம் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கிறான்.

மனதில் தேங்கியிருக்கும் ஆதங்க உள்ளுணர்வுகளை கொட்டி அவ்வப் போது நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஷ்யாம் கவிதைகளாய் வடிப்பான். அது எல்லாரையும் கவர்ந்தது- சங்கீதாவைத் தவிர.

அவள் மட்டுமே அவன் படைப்புகளையும், அவனையும் உதாசினப் படுத்தியது வேதனை ஒரு புறமும் ஏக்கம் ஒரு புறமுமாய் இருந்தது ஷ்யாமுக்கு.

சங்கீதாவை காணும்போது மட்டும் அவன் மனம் ஏனோ படபடத்தது. மற்றவர்களிடம் அவள் சிரித்துப் பேசும்போது அவசியமில்லாமல் கோபம் வந்தது.

மற்ற மாணவர்கள் அவளை 'ஹாய்' போட்டு அழைக்கும்போது அவர் களை அறைய வேண்டும் போன்ற எண்ணம் ஏற்பட்டது. எப்படியும் சங்கீதா வின் மனதில் இடம் பிடிக்க வேண்டும் என்ற வைராக்கியம் உண்டானது அவனுக்குள்.

என்னதான் தம்மை அவள் இகழ்ந்தாலும், தூக்கியெறிந்து பேசினாலும் நிச்சயம் ஒருநாள் என் படைப்பை பாராட்டுவாள் சங்கீதா. அவள் பாராட்டும்படி செய்து காட்ட வேண்டும்.

இந்த எண்ணத்தை அவனுள் விதைக்க முக்கிய காரணமாயிருந்தவர்கள் ஷ்யாமின் நண்பர்கள்.

"தலைவா, நீ என்ன வித்தை காட்டினாலும், அவளை கைக்குள்ள போட முடியாதுமா."

"எங்கள மாதிரி சீமான்களுக்கே மசியாத சங்கீதா உன் கவிதைக்குத்தான் மயங்கிடப் போறாளா?"

"டேய் பாவம் அவன் முயற்சியை ஏண்டா கொடுக்கறீங்க? ஷ்யாம் மலையை இழுக்க மயிரை போடறான். போனா மயிர், வந்தா மலை. சரிதானே?"

அதைத் தொடர்ந்து கல்லூரி காளையர்களின் சிரிப்பொலி கோஷம்.

"டேய் பாருங்கடா சங்கீதா நிச்சயமா ஒருநாள் என் கவிதையை பாராட்டத்தான் போறா, அந்த நாள் ரொம்ப தூரத்துல இல்ல. இப்ப கொக்கரிக்கிற நீங்கல்லாம் அன்னிக்கு பிரம்மிக்கத்தான் போறீங்க."

ஆக்ரோஷமாய் சவால் விடுத்தான் ஷ்யாம்.

அன்று மாலை நேரம் கல்லூரியைவிட்டு புறப்படும்போது சங்கீதாவுக் காகவே காத்திருந்தான் ஷ்யாம்.

அவனைக் கண்டும் காணாதது போல நகர முயன்றவளை அவன் குரல் தடுத்து நிறுத்தியது.

"மிஸ் சங்கீதா.."

நின்று ஒயிலாய் திரும்பினாள் பார்வையாலே "என்ன?" என்றாள்.

"இந்தக் கவிதையை வீட்டுக்குப் போய் படிச்சுப் பார்த்துட்டு உங்க அபிப் பிராயத்தை சொல்லுங்க ப்ளீஸ்..." - ஒரு கவரை அவளிடம் கொடுத்தான்.

"ஊம்.. பார்ப்போம்" அதை வாங்கிக் கொண்டு, சர்வ அலட்சியமாய் கூறிவிட்டு விருட்டென்று நகர்ந்தாள்.

அதை படித்துவிட்டு நாளை என்ன பதில் கூறப் போகிறாள் என்று அப்போதே ஷ்யாமின் மனம் படபடத்தது.

அந்த பதைப்பு சங்கீதாவிடமும் இருக்கவே செய்தது.

கவிதை எழுதினால் எப்போதுமே வெளிப்படையாக அவளிடம்





வத்சலா சிவசாமி

காண பிரித்து படிக்கச் சொல்வான் ஷ்யாம். இன்று கவரில் போட்டு தந்திருப்பது வித்தியாசமாய் பட்டது.

அதை அவனெதிரே காட்டாமல் ஒதுக்குப்புறமாய் வந்து ஆவலோடு அதை பிரித்து படிக்கலானாள்.

"என் உள்ளம் கவர்ந்த இனியவள் சங்கீதாவுக்கு ஷ்யாம் வரையும் மடல்.

இதுவரை உன்னை நெஞ்சில் வைத்தே கவிதைகள் வடித்தேன். நீதான் அதை புரிந்துக் கொள்ளாமல் என்னை உதாசினப்படுத்தினாய். ஆம் நீ உதா சினப்படுத்தியது என் கவிதைகளை அல்ல என்னைத்தான். என் காதலையும், உன் மேல் நான் கொண்டுள்ள அன்பையும் இதன் மூலம் தெரியப்படுத்துகிறேன். இனி உன் மனதையும் திறந்து காண்பிப்பாய் என்று நம்புகிறேன்.

இவண் உனக்காக வாழும்
ஷ்யாம்"

படித்து முடித்ததும் புல்லரித்துப் போனாள்.

தான் நினைத்தது நடந்துவிட்டதை எண்ணி உள்ளுக்குள் மகிழ்ந்தாள். ஆனால் இது போதாது தன் பின்னால் அவன் சுற்ற வேண்டும். தனது தரிசனத் துக்காக ஷ்யாம் ஏங்கித் தவிக்க வேண்டும்.

உடனடியாய் தானும் அவனை விரும்புவதாக அவனிடம் தெரிவித்து விடக் கூடாது இப்படியான மனோபாவத்தில் இருந்தாள் சங்கீதா.

எப்படியோ தம் அழகில் அவனை வீழ்த்திவிட்டோம் என்ற கர்வம் அவளிடம் தலை தூக்கியது.

அதே சமயம் இதனால் விரைவில் ஒரு விபரீதம் நடக்கப் போவதை அப்போது அவள் அறிந்திருக்கவில்லை.

## 4

அன்று காலை கல்லூரி வாயிலில் சங்கீதாவின் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான் ஷ்யாம்.

மஞ்சள் நிற சுடிதாரில் ஒரு எழிலான தேவதையாய் உள்ளே நுழைந்த அவள் முகம் எதையுமே பிரதிபலிக்கவில்லை.

அவள் எதிரே போய் நின்ற ஷ்யாம் என்ன பேசுவ தென்று தயக்கத்ினூடே...

"ச.. சங்கீதா.. ப.. படிச்சிங்களா என் லெட்டரை.." என் றான்.

மறுகணம் கேலியாய் புன்னகை பூத்து "ஓ... படிச்சேன்" என்று விட்டு மீண்டும் சிரித்தாள்.

பின் அவளே கேட்டாள்.

"ஷ்யாம் நீ என்னை லவ் பண்றியா? என்ன வர்ணிச்சுதான் கவிதை எழுதறியா?" கொஞ்சமும் தயக்கமின்றி பேசினாள்.

அதைக் கேட்டு பல மாணவ, மாணவிகளும் அவர்களை சூழ்ந்துக் கொண்டார்கள்.

இதைதானே சங்கீதாவும் எதிர்பார்த்தாள்.

"ஷ்யாம் நீ என்னை லவ் பண்றது உன் லெட்டரை படிச்சதும் தான் எனக்கு தெரிஞ்சது ஓ.கே. ஆனா நான் உன்னை விரும்பணும்னா சில கண்டிஷன்ஸ் இருக்கு ஷ்யாம்.. அதுக்கெல்லாம் நீ உடன்படுவியா?" பெருமையாய் கேட்டாள்.

இப்போது அவளை ஷ்யாம் மட்டுமின்றி எல்லோருமே ஆச்சரியமாய் பார்த்தனர்.







"என்ன நான் என்ன சொன்னாலும் செய்வியா?"

"ஐ மீன் நான் என்ன சொன்னாலும் செய்வியா?"

"நிச்சயமா செய்வேன் சங்கீதா" அவசரமாய் கூறினான் ஷ்யாம்.

"ஆல்ரைட் நான் சொல்லும்போது செய் போதும்" - ஒயிலாய் அங்கிருந்து தமது வகுப்பறைக்கு சென்றுவிட்டாள்.

அந்த நேரம் அவனால் சங்கீதாவை புரிந்து கொள்ள முடிய வில்லை.

அவள் வரும் பஸ்ஸில் கூட அவளின் கவனத்தை ஈர்க்க மாண வர்கள் பலர் ஓடும் பஸ்ஸிலிருந்து குதித்தும், ஜன்னலுக்கு வெளியே தலையை கொக்கு போல் நீட்டிக் கொண்டும் நிறைய சாகசம் காட்டுவார்கள்.

ஆனால் ஷ்யாம் அப்படியான ரகமல்ல. அது மாதிரி ஏதாவது செய்யச் சொல்வாளோ என்றும் நினைத்தான்.

எதுவாயினும் இப்போதைக்கு மற்றவர்களுக்கு சவாலாகவாவது உயிரைப் பணயம் வைத்தாகிலும் அவள் சொல்வதை செய்ய வேண்டு மென்று மனதில் தீர்மானித்துக் கொண்டான்.

இரண்டு நாள் ஷ்யாமை அவள் வேண்டுமென்றே கண்டு கொள்ளவில்லை. அவனுக்குள் பதட்டம் மேலோங்கியது.

இன்று எப்படியும் அவளிடம் பேசிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் மூன்றாம் மாடியிலுள்ள வகுப்பறையின் வாசலில் காத்திருந்தான்.

அவள் வருகையில் அழைத்தான்

"சங்கீதா.."

நின்றாள்.

"என்ன?" ஒன்றும் தெரியாத மாதிரி கேட்டாள்.

"நீ.. நீங்க.. நீங்க அ... அன்னிக்கி..."

எதையோ சொல்ல நினைத்து முடியாமல் தடுமாறினான்.

"ஓ.. அன்னிக்கி நான் எது சென்னாலும் செய்வேன்னு சொன்னே இல்ல. அதை கேக்கறியா?"

தலையசைத்தான்.

"என் அருமை சூரனே.. இந்த தண்ணீர் பைப் வழியாவே இங்கேயிருந்து உன்னால கீழே இறங்க முடியுமா?"

- கிண்டலாய் கேட்டாள் சங்கீதா.

"நீங்க இறங்க சொன்னா நிச்சயம் இறங்குவேன்."

"அப்படியா இப்ப சொல்றேன். இறங்கு பார்க்கலாம்."

அவள் கூற... ஒரு விநாடி அவள் முகத்தைப் பார்த்தான். உடனே செயலில் இறங்கினான்.

அந்த நீளமான பைப்பை பிடித்துக் கொண்டே சரசரவென்று கீழே வர முற்பட்டான்.



குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் பெண்கள் இரவு உணவுக்குப் பிறகு கைப்பிடி அளவு உலர்ந்த திராட்சை சாப்பிட்டு வந்தால் பால் தட்டின்றி சுரக்கும்.



சில சமயங்களில் பால் புளிக்கும் நிலைக்கு வந்து விட்டால் அடுப்பில் வைத்துக் காய்ச்ச முடியாது. பாலில் ஒரு சிட்டிகை சமையல் சோடாவைப் போட்டுக் காய்ச்சினால் திரியாமல் காய்ச்சி எடுக்கலாம்.

இரண்டடி தூரம் இறங்குவதற்குள் ஏதோவொரு தடுப்பில்
அவன் கால் பட்டு இடற. அதே வேகத்தில் பாலன்ஸ் இழந்து கைகளும்
விடுபட... வேரற்ற மரம் போல் தலை குப்புற கீழே வந்து ரத்த
வெள்ளத்தில் விழுந்தான் ஷ்யாம்.

அதிர்ந்து போன. சங்கீதா கீழே இறங்கி ஓடி வந்தாள்
கூச்சலிட்டவாறே.

அந்த நிமிடம் அவன் கடைசி துடிப்பிலிருந்தான். அவனின்
உதடுகள் எதையோ முணுமுணுத்தன.

மாணவர் கூட்டம் சூழ்ந்து கொண்டு அவனை வினவ..
மெலிதாய் "ச... சங்கீதா..." என்றான் அரை ஜீவனில் ஷ்யாம்.

அவள் அவனை நெருங்கி குனிந்த போது.. இறுதியாய் ஷ்யாம்
உதிர்த்த வார்த்தைகள்...

"ச.. சங்கீதா.. இ.. இப்பவாவது என்னை காதலி.. க்கிறியா..?" -
அவனது இயக்கங்கள் அடங்கிப் போக.. அவள் அலறினாள்.

## 5

அந்த சம்பவத்தை- ஷ்யாமை அவளால் மறக்க முடிய
வில்லை.

ஷ்யாமின் மரணச் செய்தியைக் கேட்ட மறுகணமே
அவன் தாய் மல்லிகாவும் அதிர்வில் இறந்துவிட்டாள்.

சங்கீதாவால் அதை ஜீரணிக்க முடியவில்லை. அவள் இதயத்தில்
நிலைத்துவிட்டான் ஷ்யாம். அவனை இறுதிவரை உதாசீனப்படுத்தி,
அவன் அகால மரணத்துக்கும், அவன் தாயின் சாவுக்கும் தாம் தான்
காரணம் என்ற உந்துதல் சங்கீதாவின் உள்ளத்தில் சட்டியாய் குத்திக்
கொண்டிருந்தது.

ஷ்யாமை மட்டுமே சுமந்துக் கொண்டிருக்கும் அவள்
இதயத்திலே வேறொருவனுக்கு இடமளிக்க முடியவில்லை. படிப்பை
எப்படியோ முடித்தாள். ஒரு தனியார் நிறுவனத்தில்
அக்கவுண்டண்டாக பணிபுரிகிறாள். ஆனால் எந்த ஆடவரையும்
அவள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

ஒரு மனிதன் உயிருடன் உள்ளவரை அவன் உள்ளத்தை புரிந்துக்
கொள்ளாத- அவனது அருமை உணர்ந்திராத இச்சமூகம் அவன்
மறைந்தப் பின்னே புகழாரம் சூட்டுகிறது. கவுரவிக்கிறது. இது உலக
நியதி. அதன்படியே சங்கீதாவும் இருந்தாள்.

இனி காலமெல்லாம் ஷ்யாமின் நினைவாகவே காலத்தை கழித்து
விடலாம். இது அவனுக்கு செலுத்தும் அஞ்சலி என தனக்குள்ளே
கட்டுப்பாடு விதித்திருந்தாள்.





பெற்றோரிடமும் எதையும் வெளிப்படுத்தாமல் மூடி மறைத்து
வந்தாள். திருமணம் என்ற பேச்சை எடுக்கும்போதே சீறினாள்.

அந்த சங்கீதாதான் இப்போது அரவிந்தின் புகைப்படத்தை
பார்த்த மாத்திரத்திலேயே விவரிக்க இயலாத ஆச்சரியத்திலும்,
அதிர்விலும் உட்பட்டாள்.

காரணம் அச்சு அசலாய் அந்த அரவிந்த், ஷ்யாம் போன்றே
இருந்தது தான். நினைக்கையிலேயே அவள் உடல் சிலிர்த்தது.

அந்த வெள்ளிக்கிழமை ஆபீசுக்கு அரை நாள் லீவு
சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்தாள் சங்கீதா. மாலை ஐந்து மணிக்கு
அந்த அரவிந்த் பெற்றோருடன் அவளை பெண் பார்க்க வந்தான்.

சம்பிரதாயங்கள் நிகழ்ந்தது. ஓரக்கண்ணால் அவனை காபி
தம்ளரைக் கொடுக்கும்போது நோக்கினாள் சங்கீதா.

ஷ்யாம் மறுபிறவி எடுத்து வந்துவிட்டது போன்ற முகம், உருவம்,
ஸ்டைல் எல்லாவற்றிலுமே ஒற்றுமை.

இவனே தனக்கு கணவனாய் வாய்க்க வேண்டும் என்ற ஏக்கம்
குடி புகுந்தது. அவள் கண்களையே அவளால் நம்ப முடியவில்லை.
உள்ளே போய் விட்டாள்.

பெரியவர்கள் பேசினார்கள். பெண்ணை தங்களுக்குப்
பிடித்துவிட்டது என்றார்கள் அரவிந்தின் பெற்றோர். சங்கீதாவின்
அப்பா வைத்தியலிங்கத்துக் கும் அம்மா பங்கஜத்துக்கும் சந்தோஷம்
பிடிபடவில்லை.

வரதட்சனை என்ற பேசுக்கே இடமில்லை. நீங்கள் எது
செய்தாலும் உங்கள் விருப்பம், உங்கள் மகள் சங்கீதாவே எங்களுக்கு
ஒரு மாபெரும் வர லட்சுமிதான் என்றும் சொன்னார்கள்

விரைவில் நிச்சயதார்த்தத்துக்கான நாள் குறிக்கப்பட்டது.
சங்கீதாவுக்கு மகிழ்வு பொங்கியது. இதுநாள் வரையில் காணாமல்
போயிருந்த முகப்பொலிவு அவளிடம் குடி புகுந்துக் கொண்டது.
மறுநாள் அலுவலகத்துக்கு ரம்மியமாய் புறப்பட்டாள் இன்னொரு
அதிர்வை சந்திக்கப் போவதை அறியாமல்.

மதியம் அலுவலகத்திலிருந்த சங்கீதாவுக்கு தொலைபேசி வந்தது.
ப்யூன் வந்து அழைக்க. ரிசப்ஷனை யோசனையுடன் நெருங்கி
ஒருக் களித்து படுத்திருந்த ரிசிவரை எடுத்து காதுக்குக் கொடுத்தாள்.

"ஹலோ சங்கீதா ஹியர்."

"நான் நேத்து உங்களை பெண் பார்க்க வந்த அரவிந்த்
பேசறேன்..."

- அந்த வார்த்தைகளை கேட்டதும் அவள் உடல் புல்லரித்தது.

"சொ.. சொல்லுங்க..."

- வெட்கத்தால் குரல் தடுமாறியது.

"சங்கீதா நான் உங்ககிட்ட கொஞ்சம் தனியா பேசணும்.
இன்னிக்கு ஈவினிங் அஞ்சு மணிக்கு அடையாறு மத்திய கைலாஷ்
கோயிலுக்கு வர முடியுமா?"

- அவன் கேட்டதுமே அவளால் சட்டென்று பதில் பேச
முடியவில்லை.

மனம் படபடத்தது.

"ம.. மத்திய கைலாஷ் கோயிலுக்கா?" 'ஏன்' என கேட்பதற்கு
பதிலாய் கேட்டாள்.

"ஆமாம் சங்கீதா. இது நாம ரெண்டு பேர் மட்டுமே பேச

வேண்டிய விஷயம். ப்ளீஸ் வரணும். நான் நாலரை மணியிலேருந்தே வெய்ட் பண்ணுவேன்."

"ச.. சரி வர்றேன்."

"வெச்சுடவா?"

'ஊம்' - ரிசீவரை சாற்றிய சங்கீதாவின் முகத்தில் நாணம் அப்பியிருந்தது.

மாலை 4:55 மணிக்கு சரியாய் அடையாறு மத்திய கைலாஷ் ஆலயத்தில் இருந்தாள் சங்கீதா.

கோயில் முற்றத்திலேயே அவள் வருகைக்காக காத்திருந்தான் அரவிந்த்.

"வா சங்கீதா..."

லேசான பதட்டத்துடன் நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வையை கர்ச்சீப் பால் ஒற்றிக் கொண்டு அவனோடு ஆலயத்தின் ஒரு தனிமையான இடத்திற்கு சென்றாள். இருவரும் அமர்ந்தனர்.

"சங்கீதா நான் உங்ககிட்ட ஒரு முக்கியமான உண்மையை சொலத்தான் இங்கே வரச் சொன்னேன்."

ஆரம்பத்திலேயே அவன் இவ்வாறு துவங்கியதும் அவளிடம் எதிர் பார்ப்பு அதிகமானது.

கேள்வியாய் அவனை நோக்கினாள்.

"சங்கீதா நான் உன்னை வந்து பார்த்ததுமே பிடிச்சுப்போச்சு. என் அப்பா, அம்மாவுக்கும் அதேப்போல உனக்கும் என்னைப் பிடிச்சிருக்கு. ஐ நோ தட் உன் முக பாவமே எனக்கு உணர்த்திடுச்சு. நம்மோட நிச்சயதார்த்தம் முடிஞ்சு கல்யாணமும் சீக்கிரத்துல நடக்கப் போகுது. ஆனா உன் அழகுக்கும், அப்பாவி மனசுக்கும் துரோகம் செய்ய என் உள்ளம் இடம் தரல."

- நிறுத்தினான் அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"எதுவானாலும் சொல்லுங்க. நீங்க என்ன சொல்ல வர்றீங்க?" கேட்டாள்.

"சங்கீதா வரதட்சணை கூட வேண்டாம்னு இந்த கல்யாணத்தை எங்க அப்பா, அம்மா அவசரமா நடத்த நினைக்கிறாங்களே அதுக்குக் காரணம் என்ன தெரியுமா? என்னிடம் உள்ள குறை..."

"எ.. எ.. என்ன குறை?"

"ரெண்டு வருஷத்துக்கு முன்ன ஃப்ரெண்ட்ஸ் கூட சுற்றுலா போனபோது பஸ் விபத்துல சிக்கிடுச்சு. ஏழு பேர் அந்த விபத்துல பலியாயிட்டாங்க. நான் உயிர் பிழைச்சேன் அதே சமயம் ஜென்மத்துக்கும் பிள்ளைக்கு தகப்பனாக முடியாத ஆண்மையை இழந்துட்டேன். இதோ பார் சங்கீதா அந்த மெடிக்கல் சர்டிபிகேட்" - தழுதழுத்த குரலில் பேசியவாறே அதை எடுத்து அவளிடம் காண்பித்தான்.



**து**ணிக்குப் போடும் நீலம் தீர்ந்து விட்டால் - பேனா நீல இங்க் சில துளி விடலாம்.

**க**ண்ணாடி சாமான்கள் உறுதியாக இருக்க - புதிதாக வாங்கியவுடன் வெதுவெதுப்பான நீரில் சற்று நேரம் போட்டு எடுக்கவும்.









சங்கீதாவின் தலையில் பேரிடி ஒன்று இறங்கியது போலிருந்தது.

அவன் தொடர்ந்தான்.

"எங்க அப்பாவும் அம்மாவும் இதை தெரிஞ்சு எப்படியாவது என் கல்யாணத்தை பெண் வீட்டாரை ஏமாத்தி செய்திடணும்னு நினைச்சாங்க. ஆனா நான் ஒவ்வொரு இடம் பார்க்கும்போதும் அந்த பெண்கிட்ட மட்டும் தனியா சந்திச்சு இந்த விஷயத்தை சொல்லிடுவேன். திருமணம் நின்னு போயிடும்.

அதுபோலவே உன்கிட்டயும் சொல்றேன் சங்கீதா. உனக்கு நான் தகுதியானவன் இல்லை. இதை சொல்றவரைக்கும் எம் மனசு துடிச்சது."

- அவன் கூறி முடித்ததும் அவனின் கைகளை பற்றிக் கொண்டாள் சங்கீதா.

"அ... அரவிந்த் அப்படியெல்லாம் சொல்லாதீங்க. ஷ்யாமை இழந்தது போல உங்களையும் நான் இழக்கத் தயாராயில்லை." அவள் பதைப்பைக் கண்டு விளங்காமல் கேட்டான்.

"ஷ்யாமா யாரது?"

"உங்களோட... உங்க உருவ அமைப்போட மறு பிரதின்னு அவரை சொல்லலாம் அரவிந்த். இதுதான் எம் மனசுல உறங்கிட்டிருக்கிற அந்த அப்பாவியோட நினைவுகள்..."

அவள் சொல்லத் துவங்கினாள்.

கூறி முடித்தபோது அவள் விழிகள் தாரை தாரையாய் கண்ணீரை செலவிட்டன. சில நிமிடங்கள் நிசப்தமாய் கரைந்தது. பின் அவனே பேசினான்.

"சங்கீதா நிஜமாகவே நீ ஒரு அப்பாவிப் பெண்தான். ஷ்யாம் உன் மேல உசுரையே வெச்சிருந்திருக்கான். ஆனா கல்லூரிப் பருவத்துல நீ தான் ஒரு விபரீத விதமா அப்படி சொன்னாலும் ஷ்யாம் அம்மாதிரி மாடியிலிருந்து இறங்கி இருக்கக் கூடாது. அதனால அவனுக்கும், அவங்கம்மாவுக்கும் நேர்ந்த முடிவு மிகவும் பரிதாபமானது. நான் மறுக்கல, அதையே உம் மனசுல வெச்சுக்கிட்டு இத்தினி நாளா திருமணமே வாழ்க்கையில வேண்டாம்னு நீ இருந்தியே அது உன்னதமான தியாகம். இனியும் நீ அதுபோல இருக்கக் கூடாது சங்கீதா. உனக்காக இல்லாட்டியும் உன்னை பெற்றவங்களுக்காக நீ ஒரு வாழ்க்கையை நிச்சயமா அமைச்சிக்கணும்."

"அரவிந்த நீங்கதான் என் வாழ்க்கைத் துணைவர்னு முடிவு பண்ணிட்டேன்."

"சங்கீதா என்னை திருமணம் செஞ்சிக்கிட்டா வாழ்க்கை முழுவதும் குழந்தை பாக்கியத்துக்காக ஏங்கணும் உன் முடிவு..."

"அதை மாத்த முடியாது அரவிந்த். நம்ம உள்ளம்தான் பெரிசு. குழந்தை பாக்கியம் அவசியமில்லை. நம்ம நாட்டுல ஆதரவில்லாம எத்தனையோ குழந் தைங்க அனாதை ஆசிரமத்துல இருக்குங்க. அதுல ஒன்னை எடுத்து நம்ம குழந்தையா வளர்க்கலாம். அந்தக் குழந்தைக்கு ஷ்யாமோட பேரை வைக்கலாம். என்னை ஏத்துக்குவீங்களா அரவிந்த்?"

கண்ணீரோடு கேட்டவளின் கண்களை ஆதரவாய் ஒற்றிவிட்டான் அரவிந்த் - சொன்னான்.

"நீதான் சங்கீதா என் மனைவி. நம்மை யாராலயும் பிரிக்க முடியாது."

அந்த இளம் ஜோடியை ஆலயமணி ஆசிர்வதித்தது.

**நிறைந்தது**